**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.125** **நாள்: 16.05.2022**

**தேனாம்பேட்டை மண்டலத்திற்குட்பட்ட நுங்கம்பாக்கம் மயானபூமியின் மின் தகனமேடையில் சீர்செய்யும் பணிகள் மேற்கொள்ள இருப்பதால், பொதுமக்கள் வேலங்காடு மற்றும் அரும்பாக்கம் மயானபூமிகளைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு பெருநகர சென்னை மாநகராட்சி அறிவிப்பு**

பெருநகர சென்னை மாநகராட்சி, தேனாம்பேட்டை மண்டலம், கோட்டம்-110க்குட்பட்ட நுங்கம்பாக்கம் மயானபூமியின் மின் தகனமேடை பழுதடைந்துள்ள காரணத்தினால், இயந்திரக் கோளாறை சரிசெய்யும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதனால் 17.05.2022 முதல் 25.05.2022 வரை நுங்கம்பாக்கம் மயானபூமி இயங்காது.

எனவே, சரிசெய்யும் பணிகள் நடைபெறும் மேற்கண்ட நாட்களில் பொதுமக்கள் அருகிலுள்ள வேலங்காடு மற்றும் அரும்பாக்கம் மயானபூமிகளைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி**